


நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம். கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி, குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம்கண்ணாடி ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கழக அரசின் சாதனைகளை கூறி சிறப்புரை ஆற்றினார். உடன் குறிஞ்சிப்பாடி ஒன்றிய கழக செயலாளர் வி. சிவக்குமார், தலைமை கழக பேச்சாளர் ஆராமுதன் மற்றும் கழக நிர்வாகிகள்,பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை நகர தி.மு.க. சார்பில் நான்காண்டு கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் இராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. எஸ்.வினோத் தலைமையில். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வரவேற்புரையில் எஸ்.கிருஷ்ணன். அமைச்சர் – மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி கலந்து கொண்டார் . இதில் ஜி.கே.குமுமம்சந்தோஷ் காந்தி ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் பத்மநாபன் தில்லை ஹிமாயூன் பெரியசாமி மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர்அப்துல்லா. நகர நிர்வாகிகள் தாமோதரன் வையாபுரி அமித் ரமேஷ் கோபிகிருஷ்ணன். ஆனந்தராஜ் , செங்குன்றம் திராவிட மணி கலந்து கொண்டு பேசினார். இதில் சுஜாதா வினோத் ஏ.கே.சுந்தரமூர்த்தி குமுதா குமார், க.சுந்தரம் வெங்கடேசன், வழக்கறிஞர் எம்.ஜெயக்குமார், சிவா, எல்லப்பன். அஜ்மல் கார்த்திக், பாலாஜி, உமேஷ் மற்றும் ஏர்டெல் குமார் நன்றி கூறினார்.

### ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் பயின்று வரும்

# 52 தமிழ்நாட்டு மாணவர்களை அழைத்து வர ஏற்பாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை!

சென்னை, மே 10-

ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் தீவிரவாத தாக்குதலால், தற்போது, இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிலவி வரும் சூழலில் ஜம்முகாஷ்மீரில் படித்துவரும் தமிழ்நாட்டு மாணவர்கள் குறித்து - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

கடந்த 22.4.2025அன்று ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பைசரான் பள்ளத்தாக்குப் பகுதியில் சுற்றுலாவிற்கு சென்றிருந்த பொது மக்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலர் பாதிக்கப் பட்டுள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்கள், தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாக்கும் முகமாக அவர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு உதவி மையம் தொடங்க உத்தரவிட்டு, அதனடிப்படையில் உதவி மையம் தொடங்கப் பட்டு, 01124193300 (Landline), 9289516712 (Mobile Number with Whatsapp) என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப் பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் அமைக்கப்பட்டு, அவர்களின் தேவைகள் அறிந்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், தற்போது, தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையே போர்ச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், ஜம்முகாஷ்மீரில் படித்துவரும் தமிழ்நாட்டைச் சார்ந்த 52 மாணவர்களின் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்துவர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்துள்ளார்கள்.

இந்த வேண்டுகோளுக்கு இணங்க, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், ஆகியோர் அம்மாநில நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து தொடர்ந்து பேசி, தமிழ்நாட்டு மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் தற்போது விமானச் சேவைகள் முற்றிலும் முடக்கி வைக்கப் பட்டுள்ள காரணத்தினாலும், அவர்களை சாலை வழியாக பாதுகாப்பாக அழைத்துவருவதற்கான சூழ்நிலை இல்லாத காரணத்தினாலும், தற்போதைய நிலைமை சீரானவுடன் ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் பயின்று வரும் 52 தமிழ்நாட்டு மாணவர்களை மீண்டும் தமிழ்நாட்டிற்கு அழைத்துவருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். எஸ். கணேஷ் குமார் வரவேற்புரையில் , மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமையில், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் , கழக இளைஞரணி துணை செயலாளர் மண்டலம் 2 பொறுப்பாளர் அப்துல் மாலிக் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் துரைராஜ், நாராயணசாமி, சதாம் பாரதிராஜா கலந்து கொண்டனர்.

### நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் பல்லாண்டு!

# செஞ்சி மேற்கு ஒன்றியத்தில் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம்!

## கவிஞர் காசிமுத்து மாணிக்கம் – செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை!

செஞ்சி, மே 10-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நல்லன் பிள்ளை பெற்றாள் ஊராட்சி கலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன் தலைமை தாங்கினார்.ஒன்றிய நிர்வாகிகள் மணிவண்ணன், அன்பு கிருஷ்ணன், கே.எஸ். ராஜேந்திரன், டிலைட் ஆரோக்கியராஜ் ,மன்னார், பஞ்சாட்சரம், ஊராட்சி மன்ற தலைவர் குமரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாவட்ட பிரதிநிதி கதிரவன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் மாநில வர்த்தக அணி செயலாளரும்,தலைமை கழக பேச்சாளர் கவிஞர். காசிமுத்து மாணிக்கம், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனைகளை எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கலைஞரின் மகளிர் உரிமை திட்டம்,மகளிர் விடியல் பயணத்திட்டம், புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டங்கள், என் உயிர் காப்போம் 48, மக்களை தேடி மருத்துவம், தோழி விடுதிகள்என்னற்ற வகையில் தினம் தினம் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் .

ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சித்து வருகிறது.

புதிய கல்விக் கொள்கை வகுத்தவர்களில் பா.ஜ.கவைச் சேர்ந்தவர்களில் பல பேர் உள்ளனர். இதில் முக்கியமானவர் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பா.ஜ.க. எம்.பி.ரிஷிகாந்த் துபே என்பவரது எம்.பி.ஏ. கல்விச்சான்றிதழ் போலி என்று டெல்லி பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது என்றால் புதிய கல்விக் கொள்கையை வகுத்தவர்களில் எந்த அளவிற்கு நேர்மையாற்றவர்கள் என்பதையும் புதிய கல்விக் கொள்கைக்கு இப்பேற்பட்டவர்கள் வழி வகுத்தால் இத்திட்டம் எப்படி இருக்கும் என மாவட்ட பொறுப்பாளர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கேள்வி எழுப்பினார்.

கூட்டத்தில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் விஜயராகவன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சிவப்பிரகாசம், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் சுதா பாஸ்கரன், புஷ்பா சேகர், செத்தவரை ஊராட்சி மன்ற தலைவர் தீர்த்தமலை,நல்லான் பிள்ளை பெற்றால் ஊராட்சி அவைத்தலைவர் டாக்டர் கதிர்வேல், ஏரி சங்கத் தலைவர் தேவராஜன், நந்தன் கால்வாய் தலைவர் தாமோதரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரஞ்சித் குமார், கிளைகழக செயலாளர்கள் ஸ்டீபன், கார்த்திக், குமார், அண்ணாமலை, பாபு, நிர்வாகிகள் அமரேசன், ரங்கநாதன், ராஜேந்திரன், புகழேந்தி, நேதாஜி, தேவிபாலன் ,சாந்தினி விஜயன், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.ஒன்றிய கவுன்சிலர் முரளி நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், சத்தியமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயல்பாடுகளை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மனுக்கள் குழுத் தலைவர்/ அரசு தலைமைக் கொறடா கா.ராமசந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில், மனுக்கள் குழு உறுப்பினர்கள்/ சட்டமன்ற உறுப்பினர்கள் கு.சின்னப்பா (அரியலூர்), மு.பாபு (செய்யூர்), திரு.எஸ்.டி.ராமச்சந்திரன் அவர்கள் (அறந்தாங்கி) ஆகியோர் முன்னிலையில் இன்று (07.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், செயலக முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், துணைச் செயலாளர் கணேசன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், புதுக்கோட்டை மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ராம்கணேஷ் மற்றும் குழு சார்ந்த அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.





விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, விழுப்புரம் நகரம், மந்தக்கரையில் “நாடு போற்றும் நான்காண்டு–தொடரட்டும் இது பல்லாண்டு” கழக சாதனை பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ, தலைமை கழக பேச்சாளர்கள் ஆரணி மாலா, இளம் பேச்சாளர் கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா இளந்திரையன், தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், நகர செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், க.மும்மூர்த்தி, வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பஞ்சநாதன், டி.என்.ஜெ.சம்பத், நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன், நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வேலூர் மாநகரம் கஸ்பா பகுதி திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் பகுதி செயலாளர் தி.அ.முன்வர் பாஷா தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., கழக பேச்சாளர் காஞ்சிதாவூத் கலந்து கொண்டு பேசினர்.
மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா துணை மேயர் எம்.சுனில்குமார் மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் நூருல்லா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வெ.மணிமொழி
### மே 10 (1993)



கிராம தபால் நிலையத்தில் பணிபுரிந்த இவர், கழகக் கொள்கைமீது கொண்ட பற்றின் காரணமாக, தனது பணியை துறந்து, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கழகத்தின் துவக்க காலத்தில் ஆலங்குடி பகுதியில் வட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்து கழக பணியாற்றியவர்.

ஊராட்சி மன்ற தலைவர், தொடக்க கூட்டுறவு வங்கி தலைவர், புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் போன்ற பதவி வகித்தவர்.

நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்ப்பட்டு சிறை சென்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**